டிசெம்பர் 1982

# லக்
# LUCK

எண் சோதிட, சோதிட, ரேகை சாஸ்திர மாத இதழ்

உள்ளே ..

★ எண் சோதிடப்படி
## 1983 எப்படி?

★ நாம விமோசனம் (உங்கள் பெயர் மாற்றம்)
★ அதிர்ஷ்ட வழிகாட்டி
★ இம்மாத பலன்
★ மணமேடை — அறிவுச்சுடர்
★ ரேகை சாஸ்திரம்
★ சோதிடர் கண்ட விண்மீன் (கவிதை)
— யாழ் "ஜெயம்"

2 8 3 5 7 6 9 4

ஆசிரியர்
எண்சோதிட நிபுணர்
எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

விலை
ரூபா 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "லக்" பொங்கல் மலர்

1983 ஜனவரிமாத இதழ் பொங்கல் மலராகப் பூத்துக்குலுங்கப் போகின்றது. அம்மலரின் சிறப்பிற்கு எண்சோதிட—சோதிட—ரேகை சாஸ்திரம் சம்பந்தமான கட்டுரைகள், கவிதைகளை எதிர்பார்க்கின்றோம். வணிகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள் ஆதரவையும், அன்பையும் வேண்டி நிற்கிறோம்.

ஆ-ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணு சரணம்

# லக்
# LUCK

எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

இலங்கையில் வெளியாகும் ஒரேயொரு எண்சோதிட—சோதிட—ரேகைசாஸ்திர மாத இதழ்

எண் 2 டிசெம்பர் 1982 எழுத்து: 3

ஆசிரியர்
எண்சோதிட—சோதிடநிபுணர்
**எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்**



வெளியீடு:
**அதிர்ஷ்ட நியூமரோலஜி பப்பிளிக்கேஷன்ஸ்**
19, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம்

## இதய ராகங்கள்....

அன்பு வாசகர்களே!

எமது கிறிஸ்தவ சகோதரர்கள் யாவருக்கும் **நத்தார் சோபனங்கள்!**

உங்கள் அனைவரின் ஆதரவால் ''லக்'' கிற்கு இப்போ லக் கடித்திருக்கிறது. பெரும் கிராக்கி ஏற்பட்டுவிட்டது. வெளியிட்டு ஒரு கிழமைக்குள் விற்று முடிகின்ற மகத்தான சாதனையை ''லக்'' நிலைநாட்டியுள்ளது.

பல வாசகர்கள் தங்களது ஆக்கங்களை வெளியிடுவீர்களா? எனக் கேட்டு எழுதுகிறார்கள். சோதிட சம்பந்தமானதாயும் தரமானதாயும் இருந்தால் நிச்சயம் பிரசுரிப்போம்.

அடுத்த மாத இதழ் பொங்கல் மலராக மலர இருக்கின்றது என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். வழமையான அம்சங்களுடன் எண் ரீதியாக 1983-ம் ஆண்டுக்குரிய பலன்கள் விரிவாக வெளிவரும். அத்துடன் பல புதிய அம்சங்களையும் தொடக்க இருப்பது மகிழ்ச்சிதானே!

உங்களுக்கு எவையெவை சுவைக்குமோ, ரசனையாய் இருக்குமோ பிரயோசனமாய் இருக்குமோ அவற்றை எல்லாம் பிரசுரிப்போம். பொங்கல் மலரின் சிறப்பிற்கு வியாபாரிகள் விளம்பரதாரர்களின் அன்பையும், ஆதரவையும் வேண்டி நிற்கிறோம்.

வணக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்ட வழிகாட்டி

## எண் 9 (செவ்வாய்)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### பெயர் எண்களின் பலன்கள்

18. இவர்கள் கடும் வார்த்தைகளைப் பேசுவார்கள். சண்டைப் பிரியர்கள் கோபக்காரர்கள். கடின இதயம் படைத்தவர்கள். சுயநலமே வளரும். தீயினாலும், ஆயுதத்தாலும் ஆபத்துக்கள் ஏற்படும்.

27. இவர்கள் அன்பும் குடும்பபாசமும் நிறைந்தவர்கள், சுறுசுறுப்பானவர்களும், நல்ல நோக்குள்ளவர்களும் இவர்களே! பொருள், அருள், பெரிய அந்தஸ்து ஆகிய யாவற்றையும் கொடுக்கும். இது ஒரு அதிர்ஷ்டமான எண்.

36. இவ்வெண் செல்வத்தையும், உயர் பதவியையும் அடிக்கடி பிரயாணத்தையும், கொடுத்தாலும், குடும்ப வாழ்க்கையில் மிகவும் பிரச்சனைக்குரிய எண்ணாகவே இருக்கின்றது.

45. இவர்கள் செல்வச் சிறப்போடு, பூமிப்பலனும், ஆபரண சேர்க்கையும், உயர் உத்தியோகமும், பேரும் புகழும் அடைவார்கள். எப்பாடுபட்டாவது தமது காரியத்தைச் சாதித்துக் கொள்வார்கள். மனக்குறையைக் கூட வெளியில் காட்டிக் கொள்ள மாட்டார்கள் சுகதேகியாக நீண்ட காலம் வாழ்வர்.

54. இவ்வெண் வாழ்வில் வெற்றியையும், சுகத்தையும், பொருள் வரவையும் கொடுக்கும். அத்தோடு தோல்வியையும் இடையில் கொடுத்து விடும். பேராசையே இவ்வெண்ணின் வீழ்ச்சிக்கு காரணம்.

63. இவ்வெண் திருட்டுச்சம்பந்தமான விடயங்களில் மனதை இழுத்துச் சென்று பாழாக்கி விடும். இவ்வெண் விரும்பத்தக்கதல்ல.

72. பெரும் பொருள் வரவையும், கௌரவத்தையும், சிறப்பையும் இவ்வெண் கொடுக்கும், நீடித்த நிலையான செல்வம் கிடைக்கும். பணம் வருமேயொழியச் செலவாகாது. மிக்வும் அதிர்ஷ்டமான எண்.

81. இவர்கள் கஷ்டமின்றி—எதுவித பிரயாசையுமின்றி வாழ்க்கையில் முன்னேறுவர். மந்திரியாக, சட்ட வல்லுனராக, வங்கி அத்தியட்சகத்தராக, ஆசிரியராக அநேகர் கடமையாற்றுகின்றனர். இதுவும் அதிர்ஷ்ட எண் தான்.

90. செல்வத்தில் குபேரனுக்கும். புகழும், கௌரமும் உண்டாகும். எதிலும் வெற்றி நிச்சயம். வயது முதிர்ந்த நாட்களில் ஆண்டவனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபடுவர். மிகவும் அதிர்ஷ்டமான எண்.

99. இவ்வெண் வெற்றியோடு, விரோதங்களையும் கஷ்டங்களையும்' வீண்கரைச்சல்களையும் கொடுக்கும். இவர்களுக்கு வாழ்வும் தாழ்வும் மாறிமாறி வரும். தெய்வநம்பிக்கையிருந்தால் கஷ்டங்களை நீக்கலாம்.

அதிர்ஷ்ட திகதிகள்; 9, 18, 27, 6, 15, 24, 5, 14, 23,

துரதிஷ்ட திகதிகள்; 2, 11, 20, 29, 8, 17, 26

அதிர்ஷ்ட நிறம்; சிவப்பு, வெளிர்நீலம்

துரதிர்ஷ்ட நிறம்; வெளிர் பச்சை, கறுப்பு,

மோதிரத்திற்கேற்ற அதிர்ஷ்டக் கல்;
சிவப்புக் கல் (Red stone)
பவளம் (Pearl)
மாணிக்கம் (Ruby)

| இராசி | கிரகம் | எண் |
|---|---|---|
| மேடம் — விருச்சிகம் | செவ்வாய் | 9 |
| இடபம் — துலாம் | சுக்கிரன் | 6 |
| மிதுனம் — கன்னி | புதன் | 5 |
| கடகம் | சந்திரன் | 2, 7 |
| சிங்கம் | சூரியன் | 1, 4 |
| தனு. மீனம் | வியாழன் | 3 |
| மகரம், கும்பம் | சனி | 8 |

## கிழமையும் எண்ணும்

| | |
|---|---|
| ஞாயிறு | 1 — 4 |
| திங்கள் | 2 — 7 |
| செவ்வாய் | 9 |
| புதன் | 5 |
| வியாழன் | 3 |
| வெள்ளி | 6 |
| சனி | 8 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் சோதிடப்படி 1983 எப்படி?

எண் சோதிடப்படி இவ்வருடம் 1983 (1+9+8+3=21) 2+1=3ஆக குரு அம்சமாக இருக்கிறது. இவ்வருடம் எவருக்கு நன்மை என்பதை இங்கு ஆராய்வோம்.

1. எந்த வருசத்திலும் 3—12—21—30 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களுக்கு நன்மை.
2. 3 என்ற வரிசையில் 3, 12 21, 30, 39, 48 57, 66, 75, 84, 93, என்ற எண்களில் பெயர் அமைந்தவர்களுக்கு நன்மை.
3. 3 என்ற மதிப்புடைய ஆங்கில எழுத்துக்களான C, G, L, S ஆகியவை இனிசலாகவோ, பெயரின் ஆரம்ப எழுத்தாகவோ இருப்பவர்களுக்கு நன்மை. (உதாரணம்: CHRISTY, GUNASINGAM, LALITHA, SULTAN).
4. எந்த வருசத்திலேனும் வியாழ ஆதிக்கமுள்ள காலப்பகுதியான நவம்பர் 21 தொடக்கம் டிசெம்பர் 20 வரையும், பெப்ருவரி 20 தொடக்கம் மார்ச் 20 வரையும் பிறந்தவர்களுக்கு நன்மை.
5. 3 என்று முடியக்கூடிய (கூட்டினுல்) ஆங்கில வருடத்தில் பிறந்தவர்களுக்கு நன்மை. (உதாரணம் 1947, 1956).
6. ஆங்கில மார்ச், டிசெம்பர் மாதங்களில் பிறந்தவர்களுக்கு நன்மை.
7. ஜாதகத்தில் தனு, மீனம் ஆகியவை இராசியாகவோ லக்கினமாகவோ அமைந்தால் நன்மை.
8. வியாழக்கிழமை பிறந்தவர்களுக்கு நன்மை.
9. கார்த்திகை, உத்தரம், உத்தராடம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு நன்மை.
10. வியாழன் தங்களுடைய இராசி லக்கினங்களிலோ அல்லது 3-ம் இடத்திலோ அல்லது தங்கள் ராசி லக்கின நட்சத்திர அதிபர்களுடன் கூடியோ, பார்த்தோ இருந்தாலும், லக்கினத்திற்கு வியாழ திருஷ்டி இருந்தாலும் 3-ம் அதிபதியுடன் சேர்ந்திருந்தாலும் நன்மை.
11. வியாழன் இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், தனு, கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் ஜெனன காலத்தில் இருந்தால் நன்மை.
12. ஜாதகத்தில் கடகத்தில் இராசி அல்லது லக்கினம் அமைந்தாலும், அல்லது வியாழன் இருந்தாலும் நன்மை.
13. லக்கினத்திற்கு அதிபதி அல்லது இராசிக்கு அதிபதி வியாழனுடன் இருந்தால் அல்லது வியாழ பார்வை பெற்ருல் நன்மை.
14. எந்தத் தினத்திலும் பகல் அல்லது இரவு 2 முதல் 4 மணிவரை இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்களுக்கு நன்மை.
15. ஜாதகத்தில் வியாழன் 1, 4, 5, 7, 9, 10, 11 இல் இருந்தால் நன்மை.
16. 3 என்று முடியக்கூடிய வயதுடையவர்களுக்கு நன்மை. (உதாரணம்: 3, 12, 21, 30, 39, 48, 57, 66, 75, 84, 93 ஆகிய வயதுகள்).
17. பிறக்கும்போது திருதியை, துவாதசி ஆகிய திதிகளில் பிறந்திருந்தால் நன்மை.
18. தற்போது வியாழ தெசை, வியாழ புத்தி, வியாழ அந்தரம் நடப்பவர்களுக்கு நன்மை.

இந்த 18 வகைகளுள் 12 வகைகளுக்குமேல் உங்களுக்குச் சரிவந்தால் நீங்கள் யோகவான்! 7 வகைமேல் 11 வகைவரை சரிவந்தால் பரவாயில்லை! 6-க்குக் கீழானுல் உங்களுக்கு இவ்வாண்டு 1983 துரதிர்ஷ்டமானதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடம் கற்போம்

**— பிரம்மதேவன் —**

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சோதிட சாஸ்திரத்தையும் அரிச்சுவடியில் இருந்து ஆனி இதழ்முதல் தொடர்கட்டுரையாக வெளியிடுகிறோம். சோதிடம் கற்பவர்களுக்கு இப்பகுதி மிகவும் பிரயோசனப்படும். ஆ–ர்.

கிரகங்கள் ஒவ்வொன்றும் லக்கினம் முதலாக பன்னிரண்டு ராசிகளிலும் நிற்கில் என்னென்ன பலன்களைச் செய்யும் என்ற வகையில் இதுவரை சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் ஆகிய கிரகங்கள் பற்றி அறிந்தோம்

**வியாழன் (குரு):**

**1-ம் இடத்தில் (லக்கினத்தில்) வியாழன் இருக்கப் பலன்:** அரச உத்தியோகம், கூரிய புத்தி, தர்க்க சாஸ்திர அறிவு, பாக்கிய ஸ்திரி சேர்க்கை, மனோபலம், தேகசௌந்தரியம், ஐஸ்வரிய முடைமை, தீர்க்காயுள். யாவரையும் உபசரிக்கும் உளப்பாங்கு, தனதானிய விருத்தி.

**2-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** திரவியம் சேர்தல், இதமான பேச்சு, நீதி வழுவாமை, இளமையில் திருமணம், பெரியோர் நட்பு, அழகிய சரீரம், நற்புத்திரர் உடைமை, அதிக செல்வம், ஆயுள்விருத்தி, களத்திர சுகம், இசையில் ஈடுபாடு, யாவரையும் ஈர்க்கும் வசீகரம், நல்லொழுக்கம்.

**3-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** இலட்சுமீகரம், தர்மசாஸ்திர உணர்வு, இரக்கமனம், நினைத்ததைச் சாதித்தல், சகோதரர்களுக்கு நன்மை செய்தல், மத்திம ஆயுள், ஞான உபதேசம் பெறுதல், தனிமையை விரும்பல், உலகத்தவரால் உயர்த்தப்படுதல், இராசசேவை. நல்லகல்வியறிவு, இசைப்பிரியம்.

**4-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** தைரியமுடைமை, தர்மசிந்தனை தீர்க்காயுள், வீடுவாசல் சேர்க்கை, சுகசீவியம், சுகவிருப்பு, நல்ல வர்த்தக விருப்பு, பிறதேச வாசம், சரீர சுகம், அதிக போகம், நல்லோர் - பெரியோர் சேர்க்கை, இனசன மதிப்பு, குடும்பத்தில் முதன்மை பெறுதல், பெரும் புகழ்.

**5-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** மதிநுட்பம், சாஸ்திர வல்லமை, அற்ப புத்திரர், சுகமுடைமை, அதிக செலவு, தீர்க்காயுள், அறிவுடைமை, செல்வமுடை மை, வாய்வல்லமை. மனோபலம், மிகவும் சுத்தமாயிருத்தல், பெரியோர் உறவு, சேனைக்கதிபதியாதல், வாய்ச்சாலம்.

**6-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** பகைவரை வெல்லும் ஆற்றல், வஸ்திர – ஆபரண அலங்காரப் பிரியம், சோம்பல், நோயுள்ளதேகம், தனமுடை, ஞானமின்மை, இனசன விரோதம், பெரியோர் வெறுப்பு, கொடுமையான மனம், தைரியம், பெண் விரோதத்தைச் சம்பாதித்தல்.

**7-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** புத்தி சாதுர்யம், நல்ல பாக்கியமுடைமை, சிறுவயதில் விவாகம், வியாபார லாபம், களத்திரசுகம், கீர்த்தி – புகழ், அலங்காரப் பிரியம், நற்காரியங்களைச் செய்தல்.

**8-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** அற்ப புத்திரர், மூலநோய் உபாதை. ஆயுட்குறைவு, அடக்கமில்லாமை, ஓரிடத்தில்இருக்காது அலைந்து திரிதல், ஆகாரக்குறைவு, எதிலும் நம்பிக்கையின்மை, பலவற்றில் ஆசைப்படுதல், ஆணவப் பேச்சு, யாரையும் கனம்பண்ணாமை.

**9-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** வசியமானபேச்சுத்திறன், தானதர்ம சிந்தை, நற்பாக்கியம், பெரியோரைக் கனம்பண்ணுதல், விரதம் தவறாமை, ஒழுக்கத்தோடு அசைக்கமுடியாத இறைநம்பிக்கை, சீவகாருண்ணியம். நல்ல திருமணம், இராஜ சன்மானம், பலதுறைகளில் ஆராய்ச்சி.

**10-ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்:** தயாளகுணம், கல்வியில் வல்லமை, தனம்– வாகனம் காணி பூமி உடைமை, தீர்த்தயாத்திரை செல்லு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தல், ஆயுள் விருத்தி, எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல், நற்காரியங்களைச் செய்தல், பரோபகாரம், இராஜசேவை, சத்துருஜெயம்.

11—ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்: நல்ல விவேகம், சங்கீத விருப்பு, உண்மை ஞானம், வாகன லாபம், செய்தொழில் சித்தி, புத்திரப் பேறு, அரசமதிப்பு, களத்திர சிறப்பு, பொருட் செலவிற்கு விருப்பமின்மை, சகல வழியாலும் இலாபம் பெறுதல், பிரபுக்கள் சேர்க்கை.

12—ம் இடத்தில் வியாழன் இருக்கப் பலன்: சோம்பல், கல்விக்குறைவு, தயவின்மை, பாபகருமங்களில் ஆசை, பிறதேச வாசம், பொருட்சேதம், பெரியோர் எதிர்ப்பு, போகவெறுப்பு, இராசவிரோதம், பகைவரால் பொருட்சேதம், கொடுக்கல் வாங்கல் பிணக்கு.

**சுக்கிரன் (வெள்ளி)**

1—ம் இடத்தில் (லக்கினத்தில்) சுக்கிரன் இருக்கப் பலன்: அழகிய சரீரம், கணித வல்லமை, நற்குணம், புத்திர விருத்தி, நல்ல திருமணம், பெரியோரிடத்து பெருமதிப்பு, வாழ்க்கைத்துணை மீது அதிகபிரியம், நிறைந்தசெல்வம், தேகசௌக்கியம், சாஸ்திர அறிவு, தலைமைத்துவம், வாகனமுடைமை.

2—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: வாலிப விவாகம், சுகசரீரம், சத்தியவாக்கு, முகவசீகரம், தானதருமவிருப்பு, பொருளுடைமை, பரிகாச விருப்பு, எதிர்பாலாரின் வலையில் விழுதல், போக விருப்பு, நல்ல களத்திரம், மேன்மையான கல்வி, பெரியோர் மதிப்பு.

3—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: மிகுந்த கோபம், நினைத்ததைச் சாதிக்கும் தன்மை, கலக விருப்பு, புத்திர சுகக்குறைவு, அதிக பெண் சகோதரம், நடை உடை அலங்காரப் பிரியம், இனிப்பு உணவில் அதிக விருப்பம், எதிர்பாலர்மேல் மோகம்.

4—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: வாகன விருத்தி, பந்துஜனப் பிரியம், சங்கீதசாஸ்திர உணர்ச்சி, தருமசித்தம், தீர்க்காயுள், போசனப் பிரியம், இனியநண்பர்கள், களத்திர சுகம், காணி வீடு சேர்க்கை, கவிபாடும் வல்லமை, மோகமுடைமை, சன அதிகாரம், பக்தியுடைமை.

5—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: கூர்மையான புத்தி, திரவியமுடைமை, வித்துவான், இங்கிதப்பேச்சு, சுகதேகம், அலங்காரப்பிரியம், அரச நட்பு, கீர்த்தி, அதிகாரம், நல்லமனம், கல்வி மேன்மை, செல்வமுடைமை, தன்பிரயாசையால் பொருளீட்டல்.

6—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: சத்துரு நாசம், புத்திர விரோதம், விரோத களத்திரம், விஷரோகம், ஸ்திரி சம்போகம், அதிககாமம், பந்துசன துரோகம், பலரையும் நிந்தித்தல், கலக விருப்பு, வீண்விடயங்களில் தலையிட்டு அவமானப் படுதல், மனோதுக்கம்.

7—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: அதிக காமம், கல்வி விருப்பு, கீர்த்தியுடைமை, புத்திர சுகம், பாக்கியமுடைமை, எவரும் விரும்பும் வசீகரகுணம், குடும்ப சுகக்குறைவு, எதிர்பாலருடன் இனிது பேசி இன்புறுதல், தியாக உணர்வு, மந்த புத்தி.

8—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: மிதமிஞ்சிய போக ஆசை, தீர்க்காயுள், விஷநீரினால் நோய் வாய்ப்படல், களத்திர சுகக்குறைவு, துன்மார்க்கம், இராஜ விஸ்வாசம், வாகனவீனம், குறையாத செல்வம் பந்துக்கள் விரோதம், பசுக்களாற்கேடு, பருத்த தேகம்.

9—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: தர்மசிந்தை, பாக்கியமுடைமை, தீர்க்காயுள், உபாய புத்தி, வஸ்திராபரண சேர்க்கை, குடும்ப அதிகாரம், மனஅடக்கம், தெய்வ நம்பிக்கை, அழகான உடலமைப்பு, களத்திரத்தால் அதிக நன்மை, நற்புத்திரர், பெரும் புகழ்.

10—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: மேன்மையான கல்வி, மதிநுட்பம், வாகன முடைமை, ஐஸ்வரியம், எதிர்பாலாரால் தனலாபம், எடுத்த காரிய சித்தி, வாதரோகம், இனசனநண்பர் அபிமானம், குறையாதகீர்த்தி, தீர்த்த யாத்திரைப் பலன், பிரபுத்துவம், அதிக சுகம்.

11—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: நல்ல களத்திரம், கல்வி உடைமை, மிகுந்தமோகம், சங்கீதப்பிரியம், தன்காரியம் முடிக்கின்றதிறன், பால்—தயிர்—பழங்களில் விருப்பு, பூமிப் பேறு, தொழில் விருத்தி, வாகனலாபம், நிலையானசெல்வம், கீர்த்தி—புகழ்.

12—ம் இடத்தில் சுக்கிரன் இருக்கப் பலன்: சோம்பல், ஐஸ்வரியமுடைமை, இனசனப்பகை, மிகுந்த பாக்கியம், எதிர்பாலாரால் அவமானம், நோய் வாய்ப்பட்ட உடல், சுகவிரும்பி, நித்திரைப் பிரியம், பிறர்பொருள் சேர்தல், தருமசிந்தை, நற்போசன விருப்பு.

(வளரும்- — )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பகுதியில் பெயர் மாற்ற விரும்பும் வாசகர்கள் தங்களின் பிறந்த திகதி ஆங்கிலத்தில் பெயர், தந்தை–பேரன்–பூட்டன் பெயர்கள், ஜாதகக் குறிப்பு (இருப்பின்), உங்கள் பிரச்சினைகள் ஆகியவற்றைச் சுருக்கமாக எழுதி, இதன் கீழுள்ள விலாசக் கூட்டோடு, ரூபா 20/–க்கு போஸ்ரல் ஓடரும் இணைத்து அனுப்புதல் வேண்டும். கடிதக் கூடும், பணமும் இல்லாத கடிதங்களுக்குப் பதில் கொடுக்கப்பட மாட்டாது.

● **பி. ஐயாக்கண்ணு**
அருள் ஸ்ரோர்ஸ்,
37, பிரதான வீதி,
கந்தபொல

உங்களது எண்சோதிட மாத இதழான "லக்" கைத் தவறாது வாசிப்பவர்களில் நானும் ஒருவன் நானும் எனது பெயரில் ஒரு மாற்றத்தைச் செய்துள்ளேன். அம்மாற்றம் சரியா என்பதை உங்களின் மூலம் அறிய விரும்புகிறேன். எனது பிறந்த திகதி 13-4-1951. எனது பெயர் P. Iyakkannu எனது பெயரை P. Iycan எனத் தற்பொழுது எழுதுகிறேன்.

★ உங்கள் பிறப்பெண் 4. கூட்டெண் 6. எனவே உங்கள் பெயர் அதிர்ஷ்டமாக 6 இல் அமைவதே சிறந்ததும், சிக்கலில்லாததுமாகும். ஆனல் நீங்கள் உங்கள் பெயரைச் சிரிப்புக்கிடமாக வேண்டியபடி வெட்டிச் சுருக்கியிருக்கிறீர்கள். இப்படியும் ஒரு பெயர் உண்டா? இதை எப்படி உச்சரிப்பது? எண் சோதிடம் புனிதமான, நிச்சயமான ஒரு விஞ்ஞானக்கலை. இதனைக் கேலிக் கூத்தாக்காது உங்கள் பெயரைச் சரியான உச்சரிப்பின் படி அதிர்ஷ்டமாக P. Iyaakkannu என 33 இல் வைத்து' தினமும் எழுத்தெழுத்தாக வாயினல் உரக்க உச்சரித்து, உச்சரித்து 105 முறையாகுதல் எழுதிப் பயிற்சிசெய்து வாருங்கள். அத்துடன் அதிர்ஷ்டக் கல்லான மரகதப்பச்சை அல்லது ஜேட் அல்லது இந்திர நீலம் பதித்த மோதிரம் அணியுங்கள். இப்படி நல்லெண்ணத்தோடு செய்துவர அதிர்ஷ்டம் தானே வரும். உங்கள் வாழ்வு சிறப்புறவேண்டுமென எல்லாம் வல்ல கண்ணனை வேண்டுகிறேன்.

● **சி. சிவகுமாரன்**
38-ம் கிராமம்
102, நவகிரி நகர்
வக்கியெல

நான் எத்தொழிலில் முயற்சி எடுத்தாலும் தோல்வியே கிடைக்கின்றது. க. பொ. த. சாதாரண பரீட்சை சித்தியடைந்துவிட்டு வீட்டில் இருக்கிறேன். வாழ்க்கையில் நிம்மதியே இல்லை. நான் யாருக்கு நன்மைசெய்தாலும் தீமையாகவே முடிகிறது. மனவிரக்தியினல் நஞ்சிடம்கூடத் தஞ்சம் புகலாமா என்றுகூட எண்ணுவது உண்டு. என் நிலையை நண்பர்களிடம் கூறினேன். என்னுடன் படித்த சக நண்பர்கள் சிலர் மேல் வகுப்புப் படிக்கின்றனர். சிலர் தொழில் பார்க்கின்றனர். இவர்களுள் எனது நெருங்கிய நண்பர் ஒருவர், தான் உயர்நிலைக்கு வந்தது தான் பெயர் முதலியவற்றை அதிர்ஷ்ட எண்ணுக்கு மாற்றியதால் என்று கூறினர் இதன் காரணமாக ஓர் எண்சோதிடரிடம் சென்றபோது, அவர் எனது பெயரை S. Sivagumaran என 36 இல் மாற்றித்தந்தார். இதன் படி எழுதிவந்தேன். எதுவித பயனுமில்லை. ஆனல் எதிர்ப்புக்கள் அதிகமாகியது. ஆகவே எனது வாழ்க்கையை நன்னிலைக்கு மாற்றத் தங்கள் காலடியில் என்னை அர்ப்பணம் செய்கிறேன். பெயரை அதிர்ஷ்ட எண்ணுக்கு மாற்றித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து எனது வாழ்க்கையில் ஓர் அரச தொழிலே யும் பெற்று நிம்மதி அடைய உதவிபுரியுங்கள் என மன்றாட்டத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன். எனது பிறந்த திகதி 3–5–1958. நட்சத்திரம் சுவாதி. தந்தை பெயர் மூ. சிவஞானம்.

★ உங்கள் பிறப்பெண் 3 ஆகவும், கூட்டெண் 4 ஆகவும் இருப்பதால் பெயரை அதிர்ஷ்டமாக 9 இல் அல்லது 1 இல் வைக்கவேண்டும். ஆனல் 9 இல் வைப்பதாயின் 27 இல் அல்லது 45 மட்டுமே அதிர்ஷ்டமானது. எனவே உங்கள் பெயரை உச்சரிப்பின்படி அதிர்ஷ்டமாக S. Sivacumaaran என 37 இல் வைத்து, ஒவ்வொரு நாளும் எழுத்தெழுத்தாக வாயினல் உச்சரித்து உச்சரித்து எழுதிப் பயிற்சிசெய்து, அதிர்ஷ்டக் கல்லான மஞ்சள் புஸ்பராகம் அல்லது மஞ்சள் வைரம் அல்லது கருநீலம் பதித்த மோதிரமும் அணியுங்கள். உங்கள் வாழ்வு நிச்சயம் வளம் பெறும். முதலில் நல்ல நம்பிக்கைவேண்டும். நம்பிக்கையோடு பயிற்சிசெய்து, நான் கூறியபடி பின்பற்றியவர்கள் என்றுமே தோல்விகண்டதில்லை. உங்களுக்குச் சனிமாற்றபலன் அனுசரணையாக இல்லாவிட்டாலும், வியாழ மாற்ற பலன் நிச்சயம் உதவும். 1983 உங்களுக்கு அதிர்ஷ்டமானதே. உங்கள் நல்வாழ்வுக்காக எல்லாம் வல்ல கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

● சி. சித்திரவேல்
மட்டக்களப்பு வீதி,
கோரைக்கல்லி மடு,
கிரான்.

எனது வாழ்க்கையில் மிகக்கஷ்டமும், ஏமாற்றமும், தொழில் இல்லாமலும், செய்யும் தொழில் நட்டமுமாய் அனுபவிக்கிறேன். தயவுசெய்து என் பெயரை அதிர்ஷ்ட விமோசனமாக்கித் தாருங்கள். எனது பிறந்த திகதி 4–4–1936. எனது பெயரை ஒரு எண்சோதிடர் S. Chitravel என மாற்றினர். இரண்டு ஆண்டுகளாகியும் ஒன்றும் சரிவரவில்லை, தகப்பனர் பெயர் ம. சின்னப்பிள்ளையர். என் தொழில் கமம். உங்கள் இதழ் "லக்" மாதாந்தம் பார்த்து மகிமை அடைகின்றேன்.

★ உங்கள் பிறப்பெண் 4. கூட்டெண் 9. உங்கள் பெயரை 9 இல் வைப்பதனல் அதிர்ஷ்டம் இரட்டிப்பு. காரணம் கூட்டெண் 9. செவ்வாய் பிறந்த காலப்பகுதியும் செவ்வாய் ஆதிக்கமான காலம். எனவே உங்கள் பெயரை மிகவும் அதிர்ஷ்டமாக M.S-Chithravell என 45 இல் வைத்து, தினமும் இனிசலோடு சேர்த்து எழுத்தெழுத்தாக உச்சரித்து உச்சரித்து 108 முறையாகுதல் எழுதிப் பயிற்சிசெய்யுங்கள். அத்துடன் 9 எண்ணின் பூரண சுகத்தை அனுபவிப்பதற்கு அதிர்ஷ்டக் கல்லான சிவப்புக்கல் அல்லது மாணிக்கம் அல்லது பவளம் பதித்த மோதிரம் அணியுங்கள். அதிர்ஷ்டம் உங்களைத் தேடிவரும். நல்ல நம்பிக்கையோடு பின்பற்றினல் பலன் உண்டு. உங்களுக்குச் சகல சிறப்புக்களும் வாழ்வில் கிட்ட வேண்டும் எனச் சர்வலோக நாயகனை கண்ணனை வேண்டுகிறேன்.

● எஸ். கே. ரவீந்திரன்
229/36, சென் யோசப் வீதி,
நீர்கொழும்பு.

நீங்கள் கூறியபடி S. K. Raveendran என்றே எழுதிவருகிறேன். சென்ற கிழமை எனக்கு ஆவாகப் பதிவு முடிந்தது. பெண்ணின் பெயர் Saroja. பிறந்த திகதி 27–5–1956. ராசி தனு. அவர் இப்போது R. Saroja என்று கையெழுத்து வைக்கிறர். எங்கள் இருவருக்கும் சகல ஐஸ்வரியங்களும், அதிர்ஷ்டமும் கிடைக்க எப்படி எனது மனைவி பெயரை எழுதவேண்டும்.

★ உங்கள் பிறப்பெண் 5. கூட்டெண் 7. பெயர் எண் 41. உங்கள மனைவியின் பிறப்பெண் 9. கூட்டெண் 8. பெயர் எண் 17. இருவருக்கும் திறமான பொருத்தம். இருவருக்கும வியாழ மாற்றம் மிக உத்தமம். உங்கள மனைவியின் பெயரை R. Sharojaa அல்லது R. Sarojaah என 23 இல் வைத்து, எழுத்தெழுத்தாக வாயினல் உச்சரித்து உச்சரித்து எழுதிப் பயிற்சி செய்து அதிர்ஷ்டக் கல்லான வைரம் அல்லது சேர்க்கன் பதித்த மோதிரம் அணியவையுங்கள். இருவருக்கும் அதிர்ஷ்டம நிச்சயம் உண்டு. இருவரும் சுகத்தோடும், சிறப்போடும், வாழ லீலாவினேதனை கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● **எம். எவ். எம். மஹிபால்**
**201, மருதானை ரோட்,**
**பேருவலை.**

தங்களுக்கும் தினகரனுக்கும் எழுதினேன். பதில் வெளிவரவில்லை. எனது பெயர் M.F.Mohamed Mahibal. தகப்பனுர் பெயர் Mohamed Fassy. எனது வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஒன்றையும் காணவில்லை. எந்த வேலையும் இடையில் தடைப்படுகிறது. இதனுல் வருந்துகிறேன். எனது பெயர் (Mahibal) இதற்குமுன் யான் அறிய யாருக்குமே வைக்கப்படாததும், கேள்விப்படாததுமான பெயராகவே இருக்கிறது. அநேகமாக அராபிய மொழியில் வரும் நமது இஸ்லாமிய பெயர்களுள் அடங்காததாகவும் அரபுமொழி அகராதியில் இல்லாத சொல்லாகவும் இருக்கிறது. தயவுசெய்து பதில் தரவும்.

✶ உங்கள் பிறப்பெண் 3 ஆகவும், கூட்டெண் 8 ஆகவும் இருப்பதால்தான் எதிலும் தடையும், தாமதமுமாய் இருக்கிறது. இதற்கு உங்கள் பெயரை அதிர்ஷ்டமாக M. F. Mohamed Mahibal என 59 இல் வைத்து (அதாவது உங்கள் முழுப் பெயரையும் பாவியுங்கள்) தினமும் வாயினுல் எழுத்தெழுத்தாக உரக்க உச்சரித்து, உச்சரித்து 104 முறையாவது எழுதிப் பயிற்சி செய்யுங்கள். நல்ல நம்பிக்கையோடு செய்யவேண்டும். மேலும் 5-ம் எண்ணின் பூரண ஆதிக்கத்திற்குள் வந்தால்தான் உங்களுக்கு விமோசனம் உண்டு. அதற்கு அதிர்ஷ்டக் கல்லான வைரம் அல்லது ஷேர்க்கன் பதித்த மோதிரம் அணியுங்கள். உங்கள் வாழ்வு வளம்பெற்று, ஒளிமயமான எதிர்காலத்தை அடையவேண்டுமென ஆண்டவனை வேண்டுகிறேன்.

● **ஆ. பாலசுப்பிரமணியம்,**
**224, புன்னை நீராவி,**
**விசுவமடு.**

எனக்கு 1972-ம் ஆண்டு விசுவமடுவில் கிணற்றுத்திட்டத்தில் ஒரு காணி அரசாங்கத்தால் வழங்கப்பட்டது. இக்காணியைத் திருத்திக் கிணறு வெட்டிப் பயிர்செய்தேன். முதல் 2 வருடங்களும் பெருங்கஷ்டம் அடைந்தேன். மூன்ருவது வருடம் ஓரளவு வருமானம் எடுத்தேன். பின்னர் இன்றுவரை ஒவ்வொரு வருடமும் பெருநஷ்டமாகிப் பெரும் கடனாளியாய் இருக்கிறேன். எனக்கு வழங்கப்பட்ட காணி இலக்கம் 224. நான் வெட்டிய கிணற்றின் ஆழம் 17 முழம். இக்கிணறு வெட்டுவதற்கு 74-ம் ஆண்டு கல் அறுத்துவைத்து இன்னும் அப்படியே இருக்கிறது. கிணறும் இடிந்து கால்வாசிக்குச் சேற்றினுல் நிரம்பப்பட்டுள்ளது. எனது பிறந்த திகதி 24 4–1946. நான் பெயர் எழுதுவது A. Balasubramaniam. இராசி: மகரம். இக்காணியில் ஒரு சிறிய மண் வீட்டைக் கட்டினேன். ஆனுல் அது பல மாதங்களாகக் கட்டி முடியாமல் இடைநடுவில் கைவிட வேண்டி வந்துவிட்டது. ஆகையால் தயவுசெய்து வேறு பெயரை அதிர்ஷ்டமாக மாற்றி, நல் வாழ்க்கை வாழ வழி செய்யுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

★ உங்கள் பிறப்பெண் 6. கூட்டெண் 3. உங்கள் பெயர் 38 இல் இருப்பது நன்றல்ல. அதனுல் தான் இத்தனை கஷ்டங்களையும் அனுபவிக்கிறீர்கள். உங்கள் பெயரை அதிர்ஷ்டமாக A. Balasubremaniam என 42 இல் வைத்து ஒவ்வொரு நாளும் உச்சரித்து உச்சரித்து (எழுத்துக்களை) 105 தரமாகுதல் எழுதிப் பயிற்சிசெய்து, அதிர்ஷ்டக் கல்லான மரகதப் பச்சை, அல்லது ஜேட் அல்லது இந்திர நீலம் பதித்த மோதிரம் அணியுங்கள். வாழ்வு நிச்சயம் சிறக்கும். கஷ்டங்கள், துன்பங்கள் சூரியனைக் கண்ட பனிபோல விலகிவிடும். உங்களுக்கு வியாழ மாற்றம் மிகநன்று. உங்கள் காணியின் இலக்கத்தை 224 A என வைத்துப் பாவித்தால் நல்லது. கிணற்றை 18 முளத்திற்கு வெட்டுங்கள் வெற்றிகிட்டும். உங்கள் வாழ்வு செழிப்புற மாயவனுன கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

● **ஆர். இரத்தினகுமார்**
**39/1, எட்மன்ரன் ரோட்,**
**கிரிலப்பனை,**
**கொழும்பு-6.**

எனது பெயர் ஆங்கிலத்தில் R. Ratnakumar. எனது பிறந்த திகதி 8–3–1954. என் வாழ்க்கையில் நடந்தவைகளுள் பெரும்பாலனவை துரதிர்ஷ்ட சம்பவங்களே. குறிப்பாகச் சொல்லப்போனுல் விதியின் வசமாகிவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்றும் பல்கலைக் கழகம் கிடைக்கவில்லை. இப்போ தனியார்துறையில் வேலைசெய்கிறேன். அத்துடன் ICMA படிக்கிறேன், எனது அப்பாவின் பெயர் செ. இரத்தினசபாபதி, எனது பெயரைப் பொருத்தமாக மாற்றித் தரவும். எனது வாழ்க்கை முன்னேற்றிற்கு உங்கள் பூரண ஒத்துழைப்பை நாடுகிறேன்.

★ உங்கள் பிறப்பெண் 8 ஆகவும், கூட்டெண் 3 ஆகவும் இருப்பதால் உங்கள் பெயர் நிச்சயமாக 5 இல்தான் அமையவேண்டும். எனவே உங்கள் பெயரை அதிர்ஷ்டமாக C. R. Rathnahumar என 41 இல் வைத்து, தினமும் வாயினால் வாயினால் உச்சரித்து உச்சரித்து எழுத்தெழுத்தாக எழுதிப் பயிற்சிசெய்து வரவும். அத்துடன் அதிர்ஷ்டக் கல்லான வைரம் அல்லது ஷேர்க்கன் பதித்த மோதிரமும் அணியுங்கள். உங்கள் ஜாதகத்தில் புதன் நல்ல இடத்தில் இருப்பதாலும், அப்புதன் பத்தாதிபதியாக இருப்பதாலும் மிகவும் அதிர்ஷ்டமே. உங்கள் வாழ்வில் சர்வ ஐஸ்வரியங்களோடும் வாழவேண்டுமெனச் சர்வலோக நாயகனுன கண்ணனை வேண்டுகிறேன்.

இம் முகவரியும், ரூபா 20/ம் அனுப்பும் கடிதங்களுக்கே பதில் தரப்படும்.

S. C. S CHITHAMBARANATHAN,
Editor, "LUCK"
19, Chapel, Street,
JAFFNA


## மிக விரைவில்

SUSATHA

## "லக்"

### புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | ரூபா 36-00 |
| அரையாண்டுச் சந்தா | ரூபா 18-00 |

சந்தா அனுப்புபவர்கள் போஸ்ரல் ஓடரில் அல்லது மணிஓடரில் தபாற்கந்தோர் JAFFNA COURTS என எழுதவும்.

## எண் வாரியாக 1983 உங்களுக்கு எப்படி?

## பொங்கல் மலரில் வெளிவருகிறது!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இம்மாத பலன்

— வசிட்டமுனி —

(இது பொதுவான பலன். சிலருக்கு கூட்டெண் ஆதிக்கமுள்ளதாயின் அதுவே பலன் செய்யும்)

## 1

(1, 10, 19, 28ல் பிறந்தவர்கள் 1ம்எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

1ம் எண்காரர்களுக்கு இம்மாதம் துரதிர்ஷ்டமானதே. என்ன முயற்சி எடுத்தாலும் பலிதமடையாது. நீங்கள் நன்மை செய்தாலும் கிடைப்பது தீமையே. மன அமைதி குன்றி, வீணானஅபிப்பிராய பேதங்களுக்கு ஆளாகவேண்டி வரும். யாரையும் நம்பிக்கடன் கொடுக்காதீர்கள். ஏனெனில் ஏமாற வேண்டிய காலம். சகோதரங்களே பகைக்கும்காலம். எனினும் குடும்பத்தில் அமைதி நிலவும். வீண் வழக்கு, சிறிய விபத்து ஏற்படவும் வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரியின் கண்டிப்பும், சக ஊழியரின் உபத்திரவமும் மனதை வாட்டிடும். நிம்மதியே இருக்காது. வியாபாரிகளுக்கு பொருள் நட்டமும் பகைமையும் ஏற்படும். கடையை இழுத்துப் பூட்டினால் நல்லது போல் தோன்றும். பெண்களுக்கு வாயை அடக்கி இருத்தலே சாலச்சிறந்ததாகும். அனாவசியச் சண்டை, வாக்குவாதம் ஏற்படவும், பண விரயம் செய்யவும், திருமணங்கள் தடைப்படவும், குறைப்பிரவசம் ஏற்படவும் வாய்ப்புண்டு. மாணவர்களுக்கு ஏமாற்றமும், கல்வியில் வெறுப்பும், நண்பர்கள் விரோதமும் ஏற்படும். கலைஞர்களுக்கு உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடையாது. பொறுமை காரணமாக ஆபத்துக்களில் மாட்டிக்கொள்ள நேரிடும். தெரிந்தவர் கூட காணாதது போல் செல்வர். விவசாயிகளுக்கு பயிர் அழிவு, வீண் செலவு, மாடு—கன்று இழப்பு, வாகன நட்டம், குடும்பத்தில் வைத்தியச் செலவு என்பன நிகழும்.

அதிர்ஷ்ட திகதிகள் :
5, 6, 8, 14, 15, 17, 23, 24, 26.

சமபலன் திகதிகள் :
1, 2, 4, 9, 10, 11, 13, 18, 19, 20, 22, 27, 28, 29, 31.

துரதிர்ஷ்ட திகதிகள்
3, 7, 12, 16, 21, 25, 30.

## 2

(2, 11, 20, 29ல் பிறந்தவர்கள், 2ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இம்மாதம் 2ம் எண்காரர்களுக்கு உகந்ததல்ல. நீங்கள் ஒன்றை நினைக்க தெய்வம் வேறொன்றை நினைப்பது போல, காரியங்கள் மாறாகவே நடக்கும் மன அமைதி குன்றும். கணவன் மனைவி உறவு இறுக்கமாக இருந்தாலும் சில சந்தேகங்களினால் பிரச்சினைகள் உருவாகும். நம்ப நடந்து, நம்பி நடவாதிருத்தல் உத்தமம் கோர்ட்டு வழக்குகள் தாமதமாகும். பெரியவர் ஒருவரால் சில உதவிகள் கிட்ட வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு காரியாலயம் போகவே வெறுப்பாய் இருக்கும். சுறு சுறுப்புக் குன்றி, உடல் அசதியும், சோம்பலும் ஆட்கொள்ளும். எதிர் பாலாரினால் தொல்லையே, வியாபாரிகளுக்கு போட்டியும், பொறாமையும் தலைதூக்கும். பங்காளியால் அல்லது வேலையாளால் வஞ்சிக்கப்படவும் இடமுண்டு. எதிலும் அவதானம் தேவை, பெண்களுக்கு குடும்ப சுகம் இருந்தாலும் ஊர்வம்பில் மாட்டிக் கொள்ள நேரிடும். கன்னிப் பெண்களுக்கு பேசி வந்த திருமணம் திடீரென குழம்பிவிடும். மாணவர்களுககு உற்சாகம் குன்றி, அதிக பிரயாணமும் வீண் அலைச்சலும், பரீட்சையில் மத்திம சித்தியையும் கொடுக்கும். கலைஞர்களுக்கு வெற்றி தோல்வியற்ற, லாப—நட்டமற்ற மத்திம காலம். புதிய ஆக்கங்கள் தடைப்பட்டு ஸ்தம்பித்துவிடும். விவசாயிகள் நினைத்தபடி பலன் பெறமுடியாது. வீட்டில் துக்க சம்பவம் நிகழவும் இடமுண்டு.

அதிர்ஷ்ட திகதிகள் :
5, 6, 8, 14, 15, 17, 23, 24, 26.

சமபலன் திகதிகள் :
1, 2, 4, 9, 10, 11, 13, 18, 19, 20, 22, 27, 28, 29, 31.

துரதிர்ஷ்ட திகதிகள் :
3, 7, 12, 16, 21, 25, 30.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

(3, 12, 21, 30ல் பிறந்தவர்கள், 3ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இம்மாதம் 3ம் எண்காரர்களுக்கு பொருட் செலவும், காரிய தாமதமும் ஏற்பட்டாலும், உறவினர்களும், நல்ல நண்பர்களும் கை கொடுத்துதவுவர். ஒரு சிலருக்கு வழுக்கி விழுதல் அல்லது விபத்து போன்ற சம்பவங்கள் நிகழ இடமுண்டு. எந்த விசயத்திலும் கவலையீனமாக இருக்கக் கூடாது. பொறுமையுடனும், புத்திசாதுர்யத்துடனும் காரியத்தைச் சமாளிக்க முயலவேண்டும். பிரயாணங்களால் நன்மையுண்டு. குடும்ப உறவு நெருக்கமாய் இருந்தாலும், இடையிடை பிணக்குகள் தலைதூக்கும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியரினால் கஷ்டங்கள் இருந்தாலும், மேலிடத்தின் ஆதரவு இருந்து கொண்டே இருக்கும். கடிதமூலம் மனநிம்மதி உண்டு. வியாபாரிகளுக்கு சுமாரான மாதம். வியாபார விஸ்தரிப்பிற்கு ஏற்றதில்லையாயினும் நட்டமேற்படாது. முயன்றால் வெற்றியுண்டு. பெண்களுக்கு குடும்பசுகம் குறைந்தாலும் உறவினர், நண்பர் ஆதரவும், பாராட்டும் கிட்டும். எக்காரியமானாலும் நிதானத்துடன் நடத்தல் விரும்பத்தக்கது. பெருமுயற்சியின் பின் திருமணம் ஈடேறும். மாணவர்களுக்கு உடல் அசதி, பணவிரயம், வீண் அலைச்சல் ஏற்படாலும், பரீட்சையில் சித்தி உண்டு. தேக சுகத்தைக் கவனிக்கவும் கலைஞர்களுக்கு மதிப்பும், கௌரவமும் ஏற்பட்டாலும் பொறுமை காரணமாக எதிர்ப்புக்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். விவசாயிகளுக்கு பயிர் செழிப்புற்று பணம் வந்தாலும், செலவுக்கிடமுண்டு. பொதுவாக அடுத்த ஆண்டு உங்களுக்கு மிகவும் அதிர்ஷ்டமானதே.

அதிர்ஷ்ட திகதிகள் :

1, 4, 7, 10, 13, 16, 19, 22, 25, 28, 31.

சமபலன் திகதிகள் :

3, 5, 9, 12, 14, 18, 21, 23, 27, 30.

துரதிர்ஷ்ட கதிகள் :

2, 6, 8, 11, 15, 17, 20, 24, 26, 29.

# 4

(4, 13, 22, 31ல் பிறந்தவர்கள், 4ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

4ம் எண்காரர்களுக்கு இம்மாதத்தில் பல துறைகளிலும் கஷ்டங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இன பந்துக்களினால் வீண் அசௌகரியமும், மனக்கவலையும் நேரிடும். வீண் செலவும், எதிர்பாராத பிரயாணங்களும், அலைச்சலும், நேரத்திற்கு உணவு உண்ணமுடியாது பம்பரமாய் திரிய வேண்டியிருக்கும். எதற்கெடுத்தாலும் மூளையைக் குழப்பிக்கொண்டே இருப்பீர்கள். சிலருக்கு நரம்பு சம்பந்தமான நோயினால் அவஸ்தைப்பட இடமுண்டு. புதிய பூமி அல்லது வீடு சேர்க்கைக்கும் வாய்ப்புண்டு. உத்தியோகத்தவர்களுக்கு உகந்ததல்ல. வேலைப் பழு அதிகரித்து, மேலதிகாரிகளின் தாக்கங்களும் நிம்மதியைக் குலைக்கும். உங்கள் பொறுப்புக்களை மன அடக்கத்துடனும், பொறுமையுடனும் சமாளிக்காவிடில் பல கஷ்டங்களுக்குள்ளாக வேண்டியிருக்கும். வியாபாரிகளுக்கு புதுத் தொழில் ஆரம்பித்தலைப் பிற்போடுதல் புத்திசாலித்தமானது. பெரிய முதலீடு செய்ய உகந்த காலமல்ல. பலகோணங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். பெண்களுக்கு மலையே விழுந்தாலும் தலையே நீ சும என்ற மாதிரிப் பொறுப்புக்களும், கன்னியருக்கு திருமணத்தடையும் ஏற்படும். ஒரு சில பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் ஏற்பட இடமுண்டு. மாணவர்களுக்கு மறதி அதிகமாகவும், அலைச்சலும், பரீட்சையில் போதியளவு சித்தியின்மையும், அதிக செலவும் காணப்படும். கலைஞர்களுக்கு எதிர்ப்புக்கள் அதிகமாகி மன அமைதி கெடும். விவசாயிகளுக்கு நிலத்தை நம்பிப்பலனில்லை எனினும் மன உறுதி தளராது.

அதிர்ஷ்ட திகதிகள் :

5, 6, 8, 14, 15, 17, 23, 24, 26.

சமபலன் திகதிகள் :

1, 2, 4, 9, 10, 11, 13, 18, 19, 20,
22, 27, 28, 29, 31.

துரதிர்ஷ்ட திகதிகள் :

3, 7, 12, 16, 21, 25, 30.

# 5

(5, 14, 23ல் பிறந்தவர்கள், 5ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)

இம்மாதம் 5ம் எண்காரர்களுக்கு மிக உன்னதமான காலமாகும். நீங்கள் செய்யும் எக்கருமமும் உங்களுக்குச் சாதகமான பலனையே தரும். தீமை செய்தால் கூட நன்மையாகவே மாறிவிடும். மனச் சந்தோசம் தாராளமாக உண்டு. கணவன்-மனைவி உறவு மிக இறுக்கமாக இருக்கும் சென்ற இடமெல்லாம் சிறப்பும், வரவேற்பும் காத்திருக்கும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் ஆதரவும், அந்நியர் ஒத்தாசையும், நண்பர் உதவியும் உங்களை உயர்த்தும் பூமி, ஆபரண வாகன சேர்க்கை கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு மிகச்சிறப்பு. மேலதிகாரிகளால் உதவியும் லாபமும் கிட்டும். காரியாலயத்தில் சகலரது ஒத்துழைப்பும், மெச்சுதலும் கிட்டும். எதிர்பாலாரின் நன்மையுண்டு அந்தஸ்து உயரும். வியாபாரிகளுக்கு லாபம் காட்டும் வங்கியிலே உயரும் புதிய முதலீடுகள் நன்மை பயக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். வியாபார சம்பந்தமான ஒப்பந்தங்கள் செய்யலாம். பெண்களுக்கு தனப்புழக்கம், குடும்பசந்தோசம், இல்லச்சிறப்பு என்பன நிகழும். சமூகத்தில் அந்தஸ்து, கௌரவம் உயரும். கன்னிப் பெண்களுக்கு விவாகப்பேச்சுக்கள் கைகூடும் மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் பரீட்சையில் திறமைச் சித்தி, ஆசிரியர் மதிப்பு, என்பன கிடைக்கும். எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். கலைஞர்களுக்கு புகழ் கிட்டும்; பணம் சேரும், மதிப்பு உயரும் பக்குவமான பருவம். விவசாயிகளுக்கு கவலைப்பட எதுவுமில்லை. செல்வச் சேர்க்கை, இல்லச் சிறப்பு உண்டு.

அதிர்ஷ்ட திகதிகள்.

1, 4, 9, 10, 13, 18, 19, 22, 27, 28, 31

சமபலன் திகதிகள்:

2, 3, 7, 11, 12, 16, 20, 21 25, 29, 30,

துரதிர்ஷ்ட திகதிகள்:

5, 6, 8, 14, 15, 17, 23, 24, 26

## 6

**(6, 15, 24 ல் பிறந்தவர்கள், 6ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)**

6-ம் எண் காரர்களுக்கு இக்காலம் புத்துணர்வான காலமாகும். இதுவரை இருந்துவந்த தடைகள், முட்டுக்கட்டைகள் விலகி பொற்காலம் பிறக்கிறது. இதுவரை உங்களை வெறுத்தவர்கள் திடீரென உங்களை அணைப்பர். நினைத்தவை அதிக முயற்சியின்றி பலிதமாகும். பேரும் புகழும் மதிப்பும், கௌரவமும் ஓங்கும். பணவருவாய் சுவீப் அதிர்ஷ்டம், புதுமனைப் பிரவேசம் உண்டு. குடும்ப சுகம் மனதை இதப்படுத்தும் கோர்ட் வழக்கு வெற்றி, அரசின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரியின் பாராட்டும், தொழிலகத்தில் சமுகமான சூழ்நிலையும் சக ஊழியரின் அன்பும் உண்டு. விரும்பிய இடமாற்றம் கிட்டும். வியாபாரிகளுக்கு உத்தமமான காலம். வியாபாரத்தையே விட்டுவிடவா என்று யோசித்த உங்களுக்கு உற்சாகமான வருவாய் கொடுக்கும். பகைவர் கூட உங்களைத்தேடி உதவிக்கு வருவர். பெண்களுக்கு வாய்ப்பான காலம். இதுவரை எதை எதை வாங்க விரும்பினீர்களோ அவை எல்லாம் தானாகவே வந்து சேரும். இல்லச் சிறப்பும், மன நிம்மதியும் கன்னியருக்கு கலியாணம். காதலில் வெற்றி என்பன கொடுக்கும். குடும்பப் பெண்களுக்கு குழந்தைப்பேறும் கிட்டும். மாணவர்களுக்கு குதூகலமான காலம் இதுவரை படிப்பே ஏறாது என்றிருந்தவர்கள் திடீரென உற்சாகத்தோடும், தெம்போடும் படிப்பில் ஈடுபட்டு, சகல வெற்றிகளையும் பெறுவர். கலைஞர்களுக்கு மிக உகந்த இம்மாதத்தில் புதிய ஆக்கங்கள் வெற்றியளிக்கும் உங்களைத் தூற்றியவர் கூட இப்பொழுது போற்றுவர். விவசாயிகளுக்கு எதிர்பார்த்த விளைச்சல் கிடைப்பது திண்ணம். வாகனச் சேர்க்கை, தனலாபம் உண்டாம்.

அதிர்ஷ்ட திகதிகள்:

1, 4, 9, 10, 13, 18, 19, 22, 27, 28, 31.

சமபலன் திகதிகள்:

2, 3, 7, 11, 12, 16, 20, 21, 25, 29, 30

துரதிர்ஷ்ட திகதிகள்:

5, 6, 8, 14, 15, 17, 23, 24, 26

## 7

**(7, 16, 25 ல் பிறந்தவர்கள், 7ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)**

இம்மாதம் 7-ம் எண்காரர்களுக்கு சுகதுக்கம் கலந்த மாதமாகும். பணவருவாய் இருந்தாலும் கடன்படவேண்டிய சூழ்நிலை உருவாகும். நினைத்திருக்கும் காரியங்கள் காலதாமதப் படுதலும் உதவி செய்வார்கள் என்று நம்பியவர்கள் கைவிடுதலும், மனஅமைதி குன்றியும் காணப்படும். நீதிமன்றத்தில் வழக்குகள் இருப்பின் தவணைகள் கொடுபட வாய்ப்புண்டு. இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். புத்திக் கூர்மையுள்ளவர்கள் தந்திரமாக காலத்தை நல்லபடி கழிப்பர். உத்தியோகத்தர்களுக்கு அதிக சிறப்பிருக்காது. சிலருக்கு அதிக முன்னேற்றம் வரும் அறிகுறிகள் தோன்றினாலும் கைக்கெட்டியது வாய்க்கெட்டாது போய்விடும். விரும்பாத இடமாற்றம் கூட நிகழலாம். வியாபாரிகளுக்கு பல கஷ்ட பலனைத் தந்தாலும், நிதிநிலை குறையாது. நம்பிக் கடன் கொடுக்காது இருத்தல் நன்று. பெண்களுக்கு அக்கம் பக்கத்தில் அடிக்கடி சச்சரவுகள் ஏற்படும் குடும்பத்தில் ஒருவரின் நோயினால் அலுத்துப் போவீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிப் பெண்களுக்கு திருமணப்பேச்சு நடந்தாலும், ஒப்பேறும் வாய்ப்பில்லை. காதலர்களுக்கு கஷ்டகாலமே, மாணவர்களுக்கு உற்சாகம் குன்றியே காணப்படும். எடுக்கின்ற முயற்சிக்குத்தக்க பிரதிபலன் கிட்டாது பரீட்சையிலும் போட்டிகளிலும் வெற்றிபெறுவது மிகக் கடினம். கலைஞர்களுக்கு எதிர்பாராத ஏமாற்றமும், பொருட் செலவும் ஏற்படும். மனப்போராட்டத்தை வெளியில் காட்டிக் கொள்ளமாட்டீர்கள். விவசாயிகள் நிலத்தை நம்பி ஏமாறவேண்டியிருக்கும். செலவு அதிகமாகி கடன்படவேண்டியிருக்கும். வாகனப் பலனுக்கு இடமுண்டு.

அதிர்ஷ்ட திகதிகள்

2, 3, 7, 11, 12 16, 20. 21, 25,29, 30

சம பலன் திகதிகள்:

5, 6, 8, 14. 15, 17, 23, 24, 26

துரதிர்ஷ்ட திகதிகள்:

1, 4, 9, 10, 13, 18, 19, 22, 27. 28, 31

# 8

**(8, 17, 26-ல் பிறந்தவர்கள், 8-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)**

8-ம் எண்காரர்களுக்கு இம்மாதம் இலாபகரமானதே. இதுவரை சாதிக்க முடியாதிருந்தவற்றை எல்லாம் இப்பொழுது சாதிக்க வாய்ப்பான காலம். தூர இடத்தில் இருந்துவரும் கடிதம் உங்கள் எதிர்கால வாழ்வை உன்னதமாக்க உதவும். திடீர் அதிர்ஷ்டம், பூமி—வாகன சேர்க்கை, புத்திரபலன், என்பன ஏற்படும். மன அமைதியும், குடும்பத்தில் சுபகாரியங்களும், அரசாங்க ஆதரவும் போட்டிகளில்—வழக்குகளில் வெற்றியும் உண்டாம் வராத சொத்தும் வந்துசேரும். புகழும் கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு காரியாலயத்தில் நிம்மதியும் சகலரது ஒத்துழைப்பும், மேலிடத்துப் பாராட்டும் வெளியூர் பயணங்களும் ஏற்படும். எதிர்ப்பாலார் என்றும் துணைபுரிவர். வியாபாரிகளுக்கு உன்னதமான காலம். கீரைக்கடைக்கு எதிர்க்கடை இருந்தாலும் உங்களுக்கு லாபமேயன்றி நட்டமில்லை. பொருள் வருமேயன்றி போகாது. பெண்களுக்கு குடும்பத்தில் நன்மைகள் விளையும், பணலாபம் கிட்டும். ஆபரண சேர்க்கை, அடிக்கடி விருந்துகள் பிரயாணங்கள் நிச்சயம் உண்டு. உறவினர்களும் நண்பர்களும் கைகொடுத்து உதவுவர். மாணவர்களுக்கு கல்விச் சிறப்பு, புதிய உத்வேகம், உற்சாகம், படிக்கவேண்டும் என்ற ஆர்வம், பரீட்சையில் நல்ல சித்தி, போட்டிகளில் வெற்றி என்பன கிட்டும். கலைஞர்களுக்கு பேரும், புகழும் கட்டாயம் கிடைக்கும். உங்கள் தகுதிக்கேற்ற இடம்பெறுவீர்கள். இதுவரை கைகூடாத ஆசைகள் நிறைவேறும். விவசாயிகளுக்கு பயிர்வளம், வாகன பலன், பூமி லாபம் காட்டும்.

அதிர்ஷ்ட திகதிகள்:

1, 3, 4, 9, 10, 12, 13, 18, 19, 21, 22, 27, 28, 30, 31

சமபலன் திகதிகள்:

2, 7, 11, 16, 20, 25, 29

அதிர்ஷ்ட திகதிகள்:

5, 6, 8, 14, 15, 17, 23, 24, 26,

# 9

**(9, 18, 27ல் பிறந்தவர்கள், 9-ம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்)**

இம்மாதம் 9-ம் எண் காரர்களுக்கு மிகவும் அதிர்ஷ்டமானதும் லாபகரமானதுமான மாதமாகும். எடுத்த காரியங்கள் எல்லாமே சித்தியாகும். சென்றவிடமெல்லாம் சிறப்பும் புகழும் கிட்டும். வீட்டில் சுபகரியங்களும் இனசன கொண்டாட்டங்களும் நிகழும். குடும்பத்தவர்களில் இதுவரை பிரிந்திருந்தோர் ஒன்று கூடுவர். கோர்ட் வழக்குகள் சாதகமாக தீரும். பொருளாதார விருத்தி வாகனச் சேர்க்கை, பூமிலாபம், புதுமனை கட்டுதல் என்பன கிட்டும் வாய்ப்புமுண்டு. பெரியோர் நட்பும் ஆதரவும், கிட்டும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கனிவும், ஆதரவும், பாராட்டும் கிடைக்கும். வெளிநாடு செல்ல முயற்சிப்பவர்களுக்கு அனுகூலமான காலம். வியாபார விஸ்தரிப்பு, தொழில் விருத்தி, அதிக லாபம் என்பன உண்டாகும். வரமாட்டாது என்று கைகழுவிய கடன் தானுக வந்து சேரும். பெண்களுக்கு புதிய ஆடை—ஆபரணச் சேர்க்கையும், இல்லச் சிறப்பும், மனச்சந்தோசமும் உண்டாகும். திருமணம் சுகமாய் நடந்தேறும். மாணவர்களுக்கு உற்சாகமான காலம். சுறுசுறுப்பும், கல்வியில் ஊக்கமும் பரீட்சையில் சித்தியும் காட்டும். போட்டிகளில் உங்களுக்கே வெற்றி. கலைஞர்களுக்கு தமது அபிலாசைகளை நிறைவேற்ற உகந்த காலம். வல்லமை இருந்தும் முன்னேறமுடியாது தவித்த உங்களுக்கு யோகமான மாதம். விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல், வாகனச் சிறப்பு, போதிய லாபம் வயல்—தோட்டம்—கால்நடைகள் சேர்தல் என்பன உண்டாம்.

அதிர்ஷ்ட திகதிகள்:

1, 4, 9, 10, 13, 18, 19, 22, 27, 28, 31

சமபலன் திகதிகள்:

2, 3, 7, 11, 12, 16, 20, 21, 25, 29 30

துரதிர்ஷ்ட திகதிகள்

5, 6, 8, 14, 15, 17, 23, 24, 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமேடை

மணமகன் – மணமகள் பிறந்த திகதி, சாதகம் (இருப்பின்), முகவரி, தொழில், சம்பளம், குடும்பம், சீதனம் (ரொக்கம்–வீடுவளவு, நகை– வேறு ஆதனம்) போன்ற விபரங்களோடு ரூபா 10/= க்கு போஸ்ரல் ஓடரும் அனுப்பி வைத்தால், இப்பகுதியில் பிரசுரிப்போம். கிடைக்கின்ற பதில்களுள் பொருத்தமானவற்றை தெரிந்து அவரவருக்கு அனுப்பிவைத்து, திருமணம் வரை உதவி செய்வோம். உங்கள் முகவரி பிரசுரிக்கப்படமாட்டாது.

**இல: 29 ஆண்**
**பிறந்த திகதி: 9–05–1946.**
நட்சத்திரம்: மகம்
உதயலக்கினம்: மேடம்
தொழில்: பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர்.

இந்து வேளாளர் உயர்குடும்பத்தைச்சேர்ந்த ஆணுக்கு, அழகான – குணமுள்ள – படித்த மணமகள் தேவை. தொழில் செய்பவராயின் விரும்பத்தக்கது. வீடு வளவு நகையோடு நியாயமான ரொக்கமும், எதிர்பார்க்கப் படுகிறது இலங்கையில் மிகவும் பிரபல்யம்வாய்ந்த பிரமுகரான இவருக்கு பொருத்தமானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

**இல: 30 பெண்**
**பிறந்த திகதி: 1945–8–9.**
நட்சத்திரம்: மகம் 2ம் பாதம்
7ல் செவ்வாய்
தொழில் இல்லை.

பரம்பரை உயர் வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு மணமகன் தேவை. உடையார், விதானை வழிவந்த நல்ல குடும்பம். ரொக்கமாக 15,000/= ரூபாவும், பெண்ணுக்குரிய நகையும், வீடும், பிரயோசனமுள்ள 9 பரப்புக் காணியும் சீதனமாகக் கொடுக்கப்படும். கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்த நல்ல மாப்பிள்ளை தேவை. விரும்பியோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

---

# அறிவுச்சுடர் .... 9

வாசகர்களின் அறிவைக் கூர்மைப்படுத்தவும், பல்வேறு வகையான அறிவைப்பெற்றுக் கொள்ளவும் "அறிவுச்சுடர்" உதவும். கிடைக்கப்பெற்ற சரியான விடைகளுள் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிந்தெடுக்கப்படும் இருவரின் பெயர்கள் இப் பகுதியில் பிரசுரிக்கப்படும்.

**கேள்வி.**

1. இலங்கையில் வெளியாகும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் எவை?
2. எமது தேசிய அரசுப்பேரவையின் சபாநாயகர் யார்?
3. சேக்ஸ்பியர் எத்துறையின் தந்தையாவார்?
4. முதன்முதல் என்னமொழியில் பைபிள் எழுதப்பட்டது?
5. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பெண் பாராளமன்ற உறுப்பினர் யார்?

இக்கேள்விகள் ஐந்துக்குமான சரியானவிடைகளை அஞ்சலட்டையில் எழுதி இன்றே அனுப்பி வையுங்கள்.

**அறிவுச்சுடர் 8 க்கான சரியான விடைகள்:**

(1) அந்தப் ரம் (2) 22 (3)சகாரா (4) மோகன்தாஸ் (5) 34, 50, 811.

**முதலாவது அதிர்ஷ்டசாலி:**
வி. வி. ஆர். கயிலாயபிள்ளை.
இந்துக்கல்லூரியடி,
சித்தன்கேணி.

**இரண்டாவது அதிர்ஷ்டசாலி:**
கே. சிவசங்கரநாதன்
சிவம் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்
சாவகச்சேரி.

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரேகை சாஸ்திரம்



சென்ற மாத இதழில் சதுரமான கை பற்றிப் பார்த்தோம். இம்முறை துடுப்புக் கை பற்றிப் பார்ப்போம்.

**துடுப்புக் கை:**

துடுப்புக்கையானது சாதாரணமாய் கோணலாயும், ஒழுங்கீனமாயும் அமைந்திருக்கும். ஒவ்வொரு விரலின் நுனியும் வைத்தியர்கள் மருந்துதடவ உபயோகிக்கும் துடுப்பைப் போன்றிருக்கும். இம்மாதிரிக்கையில் உள்ளங்கை சில சமயங்களில் இரண்டு ஸ்தானங்களிலே துடுப்பை ஒத்திருக்கும். அதாவது விரல்களின் ஆரம்பஸ்தானங்களில் அகன்று மணிக்கட்டின் பக்கமாய்ப் போகப் போகக் குறுகியும் இருக்கும். அல்லது மணிக்கட்டுப் பிரதேசத்தில் அகன்று விரல்களின் ஆரம்ப ஸ்தானப்பக்கமாய்ப் போகப் போகக் குறுகியுமிருக்கும். துடுப்புக்கையானது கெட்டியாயும் உறுதியாயும் இருக்கலாம்; அல்லது மிருதுவாயும், நெகிழ்வாயும் இருக்கலாம். அது கெட்டியாயும், உறுதியாயுமிருந்தால் அம்மனிதன் அமைதியற்றவனுயும், மற்றையோரால் தூண்டப்படக் கூடியவனுயும் இருப்பான். ஆயினும் அது யாதொரு காரியத்தைச் செய்து முடிப்பதில் தீவிர ஊக்கமுடைமையைக் குறிக்கும். ஆகவே அம்மாதிரிக்கையைப் பெறறிருப்பது மிகவும் மேன்மையானதாகும். மேலும் அது காரியங்களைச் செய்து முடிக்கும் அவாவையும், முயற்சியையும், சுதந்திர உணர்ச்சியையும், நூதன விசயங்களைக் கண்டு பிடிப்பதில் ஆசையையும் குறிக்கும். சமுத்திர யாத்திரை செய்து கீர்த்தி பெற்றவர்களும், புதிய தேசங்களைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனப் படுபவர்களும், பொறியியலாளர்களும், யந்திரவேலைகளில் ஈடுபடுபவர்களும் இம்மாதிரிக்கை யுடையவர்கள்.

துடுப்புக்கையானது மிருதுவாயும், நெகிழ்வாயும் இருந்தால், அது அமைதியின்மையும். சுலபமாக கோபம் கொள்ளும் சுபாவத்தையும் உணர்த்தும். இத்தகைய கையுடைய மாந்தர் எந்தவிசயத்திலும் பற்றுள்ளவர்களாய் இருக்க மாட்டார்கள். அடிக்கடி தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொண்டும், அதற்கேற்ப தங்கள் செயல்களை மாற்றிக் கொண்டும் இருப்பார்கள். சாதாரணமாய் அவர்களிடம் அதிருப்தியே குடி கொண்டிருக்கும். அவர்கள் செய்யும் காரியங்கள் வெற்றியளிக்காது இழுத்துக் கொண்டே போகும்.

இனி இந்தத்துடுப்புக் கைகளில் இரண்டு வகை உண்டு என்று முன்னமே சொன்னேம். துடுப்புக்கையானது விரல்களின் ஆரம்பஸ்தானத்தில் அகன்று மணிக்கட்டுப் பக்கத்தில் குறுகிக் கொண்டே வந்தால், அப்படிப்பட்ட கையை உடையவர் புதிய விசயங்களையோ, யந்திரங்களையோ, கோட்பாடுகளையோ, நாரீகமுறைகளையோ கணடுபிடிக்கும் பட்சத்தில் அவை மானிடரின் அன்றுடவாழ்கைக்குப் பிரயோசன மானதாய் இருக்கும். ஆனல் மணிக்கட்டுப் பிரதேசத்தில் அகன்று விரல்களின் ஆரம்பஸ்தான திசையில் குறுகிக் கொண்டே போகும் கைகளை யுடையவரோ லட்சியமான விசயங்களிலேயே தன் புத்தியைச் செலுத்துவார். அவரின் செயல்கள் மனிதரின் தினசரி வாழ்க்கைக்கு உபயோகப் படுபவைகளாக இருக்கமாட்டா.

(தொடரும்)

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய கஷ்டநிவாரணி லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோதிடர் கண்ட
# விண்மீன்

வானகத்தின் கீழ்த்திசையில் விண்மீன் தோன்றி
வழிகாட்ட யூதர்களின் அரசர் தம்மை
ஞானியராம் சோதிடர்கள் வணங்க வேண்டி
நலந்திகழ ஜெருசலேம் நகரில் வந்தார்
மீனெழுந்த நாள் பொழுது இறையோர் கூற்று
மிக நுணுக்க மாய்க்கணித்து வந்த செய்தி
தானுரைக்க ஏரோதன் தத்தளித்தான்
தனதுமறை வல்லுநரைத் தனித்துக் கேட்டான்

❁

'' யூதேயா நகரத்தின் ஜெருசலேமே
நீ சிறிய தில்லை; என் ஸ்ராயேல் மக்கள்
நாயகனுன் இடந்தனிலே பிறப்பார் '' என்று
ஞானஇறை வாக்கினர்தாம் நவின்ற செய்தி
மேதையராம் மறைநூலார் ஆய்ந்து சொன்னார்
மிகநடுங்கி ஏரோதன் ஞானியர் பால்
'' தூயதிருக் குழந்தையினைப் பெத்லகேமில்
தோத்திரித்து மீண்டுமிவண் வருக '' என்றான்

❁

ஒளிவிண்மீன் இயேசுபரன் தொழுவம் மீது
ஒரு நிலையில் நின்றதனைக் கண்டு நெஞ்சம்
அளவில்லா மகிழ்கூர ஞான வேந்தர்
அன்னைமரி பாலகனை ஆரா தித்தார்
உளமுருகிப் பொன், தூபம், வெள்ளைப் போளம்
உன்னதர்பொன் அடியிணையில் அர்ப்பணித்தார்
பழியுடையான் ஏரோதன் மனை மீளாத
படிகனவில் எச்சரிக்க நாடு மீண்டார்

யாழ். '' ஜெயம் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவநாகரிக நங்கையருக்கேற்ற ஆடைகளுக்கும்
ஆடவருக்கேற்ற துணி வகைகளுக்கும்

மணிப்புரி
காஞ்சிபுரம்
வூலி
G—44
ரேயல் ரிசூ
ஆராதனு
சிவோன்



பட்டு வேட்டி
சால்வை
றெடிமேட் சேட்
சூட்டிங்
சேட்டிங்
ஆகிய
சகல

வெளிநாட்டுப் பிடவைகளுக்கும்,
உள்ளூர் பிடவைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்

# சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்


241, பிரதான வீதி, கொழும்பு – 11. தொலைபேசி: 24153, 29820

★ வியாபாரிகளுக்கு மொத்த விற்பனையாளர்கள்

தலைமையகம் :
நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்,
58, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23232

கிளை :
சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
172 (84), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி : 23713

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களுக்குத் தேவையான சகல அளவு

# கருங்கற்கள்

பெற்றுக்கொள்ள வவுனியாவில் ஒரே ஸ்தாபனம்

## கருணு மெற்றல் இன்டஸ்றீஸ்

யாழ் வீதி, தாண்டிக்குளம், வவுனியா.

தலைமையகம்:

## கருணுமூர்த்தி அன் கோ

கந்தசாமி கோவில் றேட், வவுனியா.

தொலைபேசி: 2377



Printed and Published by S. C. S. Chithambaranathan
Printed at St. Joseph's Cathoilc Press, Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org